## பாடம் - 1
## தவ்ஹீதும் அதன் வகைகளும்

## الدرس الأول
## التوحيد وأنواعه

தவ்ஹீத் என்றால் என்ன?

தவ்ஹீத் என்பது அல்லாஹ்வை மட்டும் ஒருமை படுத்துவது வணக்க வழிபாடுகளை அவனுக்காக மட்டும் நிறைவேற்றுவதாகும். மேலும் தவ்ஹீத் அல்லாஹ்வின் கட்டளைகளில் மேன்மையானதாகும் அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்

﴿ قُلْ هُوَ اللهُ أَحَدٌ ﴾ ﴿الإخلاص:١﴾

நபியே கூறுங்கள் அல்லாஹ் அவன் ஒருவனே (அல் இக்லாஸ்: 1)

﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴾ ﴿الذاريات: ٥٦﴾

மனிதர்களையும் ஜின்களையும் அல்லாஹ்வை வணங்குவதற்காகவே தவிர நாம் படைக்கவில்லை (அத்தாரியாத்:56)

﴿ وَاعْبُدُوا اللهَ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا ﴾ ﴿ النساء: ٣٦﴾

மேலும் அல்லாஹ்வையே வணங்குங்கள் அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள் (அந்நிஸா:36)

**தவ்ஹீத் மூன்று வகைப்படும் அவை:**

தவ்ஹீத் ருபூபிய்யா, தவ்ஹீத் உலூஹிய்யா, தவ்ஹீத் அஸ்மா வஸ்ஸிஃபாத்

### தவ்ஹீத் ருபூபிய்யா :

ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் அல்லாஹ்விற்கு மட்டுமே உரியது என்று அவனை ஒருமைபடுத்துவதாகும் அதாவது இந்த உலகத்தில் படைத்தல் வாழ்வாதாரம் அளித்தல் வானம் பூமி ஆகியவற்றின் அதிகாரம் அல்லாஹ்விற்கு மட்டுமே உள்ளது

அல்லாஹ் கூறுகிறான் :

﴿ هَلْ مِنْ خَالِقٍ غَيْرُ اللهِ يَرْزُقُكُمْ مِنَ السَّمَاءِ وَالْأَرْضِ لَا إِلَهَ إِلَّا هُوَ فَأَنَّى تُؤْفَكُونَ ﴾ ﴿ فاطر:٣ ﴾

உங்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உணவளிப்பவன் அல்லாஹ்வையன்றி வேறு படைப்பாளன் இருக்கின்றானா? அவனையன்றி வேறு இறைவன் இல்லை அன்றியும் நீங்கள் எவ்வாறு திருப்பப்படுகிறீர்கள் (ஃபாதிர் : 3)

﴿ تَبَارَكَ الَّذِي بِيَدِهِ الْمُلْكُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ ﴾ ﴿ الملك: ١ ﴾

எவனுடைய கையில் ஆட்சி இருக்கிறதோ அவன் பாக்கிவான் மேலும் அவன் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவன் (அல்முல்க் : 1)

அல்லாஹ்வின் ஆட்சி இப்பேரண்டத்திலுள்ள அனைத்தையும் உள்ளடக்கிய ஆட்சியாகும். அதில் அவன் விருப்பம் போல் ஆட்சி செய்வான்.

நிர்வகிப்பதில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல் என்பது அவன் மட்டுமே அனைத்துப் படைப்பினங் களையும் நிர்வகிப்பவன் என்று நம்புவதாகும்.

﴿ أَلَا لَهُ الْخَلْقُ وَالْأَمْرُ تَبَارَكَ اللهُ رَبُّ الْعَالَمِينَ ﴾ ﴿الأعراف: ٥٤﴾

அல்லாஹ் கூறுகிறான்: அறிந்துகொள்ளுங்கள்! படைத்தலும், ஆணையிடும் அதிகாரமும் அவனுக்கே உரியன! அகில உலகத்துக்கும் அதிபதியாகிய அல்லாஹ் பாக்கியம் பொருந்தியவன். (7:54)

இதுதான் எல்லாப் படைப்பினங்களையும் உள்ளடக்கிய நிர்வகித்தல்!

மனிதர்களில் சொற்பமானவர்களைத் தவிர வேறு யாரும் இந்த வகைத் தவ்ஹீதை நிராகரிக்கவில்லை. அவர்களும்கூட வெளிப்படையில் நிராகரித்தார்களே தவிர அவர்களின் உள்மனங்களில் அதனை ஏற்றுக் கொள்ளவே செய்தனர்.

﴿ وَجَحَدُوا بِهَا وَاسْتَيْقَنَتْهَا أَنْفُسُهُمْ ظُلْمًا وَعُلُوًّا ﴾ ﴿ النمل : ١٤﴾

அவர்களது உள்ளங்கள் அவற்றை உறுதியாக நம்பியிருந்தும் அநியாயமாகவும் ஆணவமாகவும் அவற்றை மறுத்தனர் (27:14) என்று அல்லாஹ் கூறுவதுபோல.

இவ்வாறு அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு எந்தப் பலனையும் அளித்திடாது. ஏனெனில் இணைவைப்பவர்கள் அதனை ஏற்றுக் கொண்டது அவர்களுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை.

அவர்களைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

﴿وَلَئِنْ سَأَلْتَهُمْ مَنْ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ لَيَقُولُنَّ اللهُ فَأَنَّى يُؤْفَكُونَ﴾ ﴿العنكبوت:٦١﴾.

வானங்களையும் பூமியையும் படைத்தவனும், சூரியனையும் சந்திரனையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனும் யார்? என்று அவர்களிடம் நீர் கேட்டால், ‘அல்லாஹ்’ என்று கூறுவார்கள். அப்படியாயின் எவ்வாறு அவர்கள் திசை திருப்பப்படுகிறார்கள்?(29:61)